# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 60/மா/2022**
**நாள் : 21.06.2022**

திரு. M. ஜனார்த்தனம்,
சென்னை– 53. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–7,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, அம்பத்தூர், சம்தரியா நகர், முதல் தெரு, எண்.33 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.ஜனார்த்தனம் என்பவரின் 26.05.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.05.2022 அன்று பெறப்பட்டு, 60/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

The complainant in his petition has stated that:

"I have submitted a complaint to the Member Secretary of CHENNAI METROPOLITAN DEVELOPMENT AUTHORITY to take enforcement action on the unauthorized illegal construction at Pattravakkam main road, Ambattur on 29/07/2021. The Member secretary had directed the Commissioner, Greater Chennai Corporation and Zonal Executive Engineer (Zone VII ) to examine the veracity of the complaint and to take enforcement action against the illegal construction. But so far no reply and action was taken by the aforementioned Greater Chennai Corporation officials.

The Pattravakkam main road is a sixty feet wide road where the illegal construction is also encroached the Pattaravakkam main road

4) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோர், 07.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள் :

"சென்னை அம்பத்தூர், பட்டரவாக்கம் மெயின் ரோட்டில் பிளாட் எண்.1A/1-ல் ஆட்டோமெடிவ் மெட்டல் இன்பிரெக்னேட்டர் என்கின்ற நிறுவனமும் மற்றொரு நிறுவனமும், மேலும் அதன் அருகே பிளாட் எண்.1A/2-ல் இயங்கி வரும் மற்றொரு நிறுவனமும், புல எண்.180–ல் அமைந்துள்ள வாய்க்கால் புறம்போக்கு பகுதியை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தெரிவித்து தேவையான நடவடிக்கை எடுக்கும்படி மாநகராட்சிக்கு புகார் மனுவினை மனுதாரர் இணையம் வழியாக (online) அனுப்பியிருந்தார். இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட பிளாட் எண்.1A/1 மற்றும் 1A/2-ல் இயங்கிவரும் குறிப்பிட்டுள்ள 2 நிறுவன உரிமையாளர்களுக்கும் Stop Work Notice / Calling for approval Plan கடந்த 19.5.2022 அன்று மாநகராட்சியால் அளிக்கப்பட்டது; மற்றொரு நிறுவனத்திற்கும் Stop Work Notice / Calling for approval Plan இன்று (7.6.2022) அந்நிறுவனத்தின் உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவிப்பிற்கான கால அவகாசம் முடிவுற்றவுடன் Lock and Seal Notice மற்றும் மாநகராட்சி ஆணையரின் உத்தரவு பெற்று De-occupation நோட்டீஸ் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன :

மனுதாரர் திரு. M. ஜனார்த்தனம், அம்பத்தூர் பகுதியில் பட்டரவாக்கம் மெயின் ரோட்டில் புல எண்.180-ல் வாய்க்கால் புறம்போக்கு பகுதியை மூன்று நிறுவனங்கள் சுமார் 0.24.5 ஏர்ஸ் பரப்பளவு பகுதியை ஆக்கிரமித்து கட்டியுள்ளது குறித்தும் இவ்வாக்கிரமிப்பு மழைக்காலங்களில் மழைநீர் கொரட்டூர் ஏரிக்கு செல்வதற்கு தடைபடுவதாகவும், அங்கு குடியிருப்பு பகுதியை பெரும் மழைநீர் சூழ்ந்து சிரமம் ஏற்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார். இது குறித்து மனுதாரர் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு 29.7.2021 அன்று மனு செய்து அம்மனுவானது 4.8.2021 அன்று மேற்படி குழுமத்தால் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 7ன் செயற்பொறியாளருக்கு, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதை குறித்து அக்குழுமத்தின் அதிகாரத்தை, சென்னை மாநகராட்சிக்கு அளிக்கப்பட்டதை சுட்டிக்காட்டி "Chennai City Municipal Corporation Act, 1919"- ன்படி நடவடிக்கை எடுக்க கோரப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களுக்கு இணைய வழி புகார் அளித்தும், நேரில் வலியுறுத்தியும் நீர்நிலை ஆக்கிரமிப்பை அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-7ன் மாநகராட்சி அலுவலர்கள் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாதது தெரிய வருகிறது. மேலும், வடகிழக்கு பருவ மழைக் காலத்தில் RDO ஆய்வுக்குப்பின், அம்பத்தூர் கிராம நிர்வாக அலுவலர், மனுதாரர் குறிப்பிட்டுள்ள 3 நிறுவனங்கள் ஆக்கிரமித்து கட்டியுள்ள 0.24.5 ஏர்ஸ் நிலம் கிராம கணக்குகளின்படி, வாய்க்கால் என குறிப்பிட்டுள்ளதாகவும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள 3 நிறுவனங்கள் வாய்க்கால் புறம்போக்கு

பகுதியை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை சுட்டிக்காட்டி, ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க அறிக்கை கொடுத்துள்ளதையும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மாநகராட்சி மண்டலம்-7ன் அலுவலர்களால், 4.8.2021 முதல் 5.5.2022 வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், மீண்டும் 6.5.2022 அன்று இணைய வழியில் மனுதாரர் புகார் மனு அனுப்பியுள்ளார். அதன் பின்னரே 18.5.2022 அன்று மண்டலம் -7ன் செயற்பொறியாளர் தல ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளார்.

தல ஆய்வுக்குப் பின்னர், சென்னை மாநகராட்சி மண்டலம்-7-ல் பணிபுரியும் பொறியாளர்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு 19.5.2022 அன்று இரண்டு நிறுவனங்களுக்கும், விசாரணை நாளான இன்று (7.6.2022) ஒரு நிறுவனத்திற்கும் Tamil Nadu Town & Country Planning Act, 1971 (as amended by Act 61of 2008)-ன் Section 56 (1) and 57 read with section 85 of the said Act - ன்படி Stop Work Notice / Calling for Approval Plan அறிவிப்பு கொடுத்துள்ளதாகவும், கால அவகாசம் முடிந்தபின் Lock and Seal Notice மற்றும் மாநகராட்சி ஆணையரின் உத்தரவு ஏற்று De-Occupation நோட்டீஸ் அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், 2011-ல் அம்பத்தூர் நகராட்சி சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதாகவும், அம்பத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான நில வரைபடங்கள், பதிவேடுகள், அம்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து சென்னை மாநகராட்சிக்கு கிடைக்கப் பெறாததால் உரிய நடவடிக்கையை எடுக்க காலதாமதம் ஆனதாகவும் விசாரணையின்போது தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சட்ட விரோதமாக, அனுமதியில்லாமல் கட்டப்படும் கட்டடங்களை, அகற்றுவது குறித்து சென்னை மாநகராட்சியின் ஆணையாளருக்கு உள்ள அதிகாரங்களை ‘Chennai City Corporation Act, 1919’-ன் பிரிவு 256-ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்டுகிறது.

**<u>Section 256 Powers of Commissioner :</u> Demolition or alteration of building [......] work unlawfully commenced, carried on or completed**. – (1) If the commissioner is satisfied –

(i) that the construction or re-construction of any building [.....],
   (a) has been commenced without obtaining the permission of the commissioner or where an appeal or reference has been to the [standing committee] in contravention of any order passed by the [standing committee], or
   (b) is being carried on, or has been completed otherwise than in accordance with the plans or particulars on which such permission or order was based, or
   (c) is being carried on, or has been completed in breach of any of the provisions of this Act or of any rule or by-law made under this Act or of any direction or requisition lawfully given or made under this Act or such rules or by-laws, or

(ii) that any alterations required by any notice issued under section 244 have not been duly made, or

(iii) that any alteration of, or additions to, any building or any other work made or done for any purpose in, to, or upon any building, has been commenced or is being carried on or has been completed in breach of section 255, he may make a provisional order requiring the owner or the builder to demolish the work done, or so much of it as, in the opinion of the commissioner, has been unlawfully executed, or to make such alterations as may, in the opinion of the commissioner, be necessary to bring the work into conformity with the Act, rules, by-laws, direction or requisition as aforesaid, or with the plans or particulars on which such permission or order was based, and may also direct that until the said order is complied with the owner or builder shall refrain from proceeding with the building [......]

(2) The commissioner shall serve a copy of the provisional order made under sub-section (1) on the owner of the building [.....] together with a notice requiring him to show cause with a reasonable time to be named in such notice why the order should not be confirmed.

(3) If the owner fails to show cause to the satisfaction of the commissioner, the commissioner may confirm the order with any modification he may think fit the make and such order shall then be binding on the owner.

**மேலும், நீர்நிலைகளின் மீது ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றிட, மாண்பமை உச்சநீதிமன்றத்திலும், சென்னை உயர்நீதிமன்றத்திலும், பல்வேறு தீர்ப்புகளில் கீழ்க்காணும் கருத்துரைகளைக் குறிப்பிட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

(i) That encroachments in water bodies and water resources are to be considered as a serious offence and all these encroachments are to be evicted and such encroachers if they are otherwise poor houseless persons, their cases can be considered in the schemes if any implemented by the Government and if they have submitted any application for such allotment of houses.

(ii) In fact, the classification as Ooranis, Odais and lakes in the revenue records are all areas identified in the villages where the rain water gets stored enabling the local villages to use the same for various purposes throughout the year inasmuch as most parts of the state are solely dependant on seasonal rains both for agricultural operations as well as for other requirements. Therefore, it is imperative that such natural resources providing for water storage facilities are maintained by the State Government by taking all possible steps, both by taking preventive measures as well as by removal of unlawful encroachments.

(iii) Concededly, the water bodies are required to be retained. Such requirements is envisaged not only in view of the fact that the right to water as also quality life are envisaged under Art.21 of the Constitution of India, but also in view of the fact that the same has been recognized

in Articles 47 and 48-A of the Constitution of India. Article 51-A of the Constitution of India furthermore makes a fundamental duty of every citizen to protect and improve the natural environment including forests, lakes, rivers and wildlife.

(iv) It is clear that all "Kuttai Poramboke" "Pond Poramboke" and other Poramboke lands belong to the Government are to be preserved for protecting the environment and for the usage of the public at large. There cannot be any leniency or misplaced sympathy in respect of such encroachments of the Government land and the authorities competent are duty bound to protect the same in all respects.

(v) The legal Principles in this regard, are now settled and encroachments in water bodies and water resources are to be evicted in the interests of public at large and in order to protect the water resources to the State. In the event of allowing such encroachments in water bodies and water resources, the same will cause not only damage, but also will create flood related disasters, more specifically during rainy season. Thus, neither the Government nor the courts can encourage such encroachments in respect of water bodies and water resources and immediate actions are to be initiated to evict all such encroachments in water bodies and water resources.

(vi) The natural resources of earth including the air, water, land, Flora and Fauna and especially representative samples of natural ecosystem must be safeguarded for the benefits of present and future generations through careful planning or management. Thus, there is no doubt the fact that there is a responsibility bestowed upon the Government to protect and preserve the tanks and its supply channels which are important part of the environment of the area.

(vii) Inasmuch as this writ petition has come before us by way of public interest litigation, we take this opportunity to direct the State Government to identify all such natural water resources in different parts of the State and wherever illegal encroachments are found, initiate_appropriate steps in accordance with the relevant provisions of law for restoring such natural water storage resources which have been classified as such in the revenue records to its original position so that the suffering of the people of the State due to water storage is ameliorated.

மேற்குறிப்பிட்டவாறு, பல்வேறு வழக்குகளில் மாண்பமை உச்சநீதிமன்றத்தாலும், உயர் நீதிமன்றத்தாலும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவாறும், வலியுறுத்தப்பட்டுள்ளவாறும் நீர்நிலைகளை ஆக்கிரமிப்பு செய்வது சட்டப்படியான குற்றமாகும் என்பதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விழைகிறது.

விரிவான விசாரணைக்குப்பின், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கிறது :-

மனுதாரரின் புகார் மனுவிற்குப் பின்னர், கடந்த ஆண்டு நவம்பர் மாதம், வட கிழக்குப் பருவ மழையின் போது பெய்த பெருமழையினால், மழை நீர் சூழ்ந்து அருகிலுள்ள நீர்நிலைகளுக்கு செல்ல முடியாமல், மழைநீர் தேங்கி, அதனால் சுகாதார சீர்கேடுகளுக்கு ஆளாகி சென்னை மாநகர மக்கள் பெருந்துயருக்கு உள்ளானதை அனைவரும் அவ்வளவு எளிதில் கடந்து செல்ல முடியாத, மறக்க முடியாத ஒரு துயர சம்பவமாகும். மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள ஆக்கிரமிப்புகள் சுமார் 0.24.5 ஏர்ஸ் வாய்க்கால் புறம்போக்கில் ஆக்கிரமித்து கட்டப்பட்ட பகுதிகளை அகற்றியிருந்தால் அப்பகுதி மக்கள் மழைநீர் சூழ்ந்து பாதிப்புக்கு உள்ளாகாமல் தவிர்த்திருக்க வாய்ப்பு உள்ளது என்பதையும் இம்முறைமன்றம் சுட்டிக் காட்டுகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மூன்று நிறுவனங்களும் வாய்க்கால் புறம்போக்கில் சுமார் 0.24.5 ஏர்ஸ் நிலத்தை ஆக்கிரமித்துக் கட்டியுள்ளதால் மழைநீர் அருகிலுள்ள ஏரிக்குச் செல்ல முடியாமல் தேங்கி நின்றுள்ளது. வருவாய் கோட்டாட்சியர் ஆய்வின் போது அம்பத்தூர் கிராம நிர்வாக அலுவலர் கிராமக் கணக்குகளில் சுமார் 0.24.5 ஏர்ஸ் நிலம் வாய்க்கால் என குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டி அறிக்கையாக அனுப்பியும், மண்டலம்-7ன் அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இச்செயல், மண்டலம் -7ன் அலுவலர்கள் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சுமார் 0.24.5 ஏர்ஸ் வாய்க்கால் புறம்போக்கை ஆக்கிரமிப்பு செய்துள்ள மூன்று நிறுவனங்கள் செய்துள்ள ஆக்கிரமிப்பை ஊக்குவிப்பதாகவே அமைந்துள்ளது. வாய்க்கால் புறம்போக்கு ஆக்கிரமிப்புகளை அகற்ற மாநகராட்சி மண்டலம்-7ன் அலுவலர்களுக்கு அக்கறை இல்லாததையே காட்டுகிறது.

எதிர்வரும் வடகிழக்குப் பருவ மழையினை கருத்தில் கொண்டாவது, மண்டலம் - 7, வார்டு 85-ன் கள அலுவலர்கள் அனைவருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதை கண்காணித்து மனுதாரர் குறிப்பிடும் சுமார் 0.24.5. ஏர்ஸ் வாய்க்கால் புறம்போக்கில் மூன்று நிறுவனங்கள் ஆக்கிரமித்து கட்டியுள்ள பகுதிகளை அகற்றி மழைநீர் அருகிலுள்ள ஏரிக்கு செல்வதை உறுதிப்படுத்த இம்முறைமன்றம் மண்டலம்-7ன் மண்டல அலுவலர் மற்றும் செயற்பொறியாளருக்கு உத்தரவிடுகிறது. மண்டலம் -7-ன் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் இம்முறைமன்றத்தில் விசாரணையின்போது உறுதியளித்தவாறு, Lock and Seal Notice மற்றும் Demolition Notice ஆகியவற்றை குறிப்பிட்ட காலவரையறைக்குள் உரிய சட்ட விதிமுறைகளின்படி, அறிவிப்புகள் கொடுக்க நடவடிக்கைக்கள் மேற்கொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்ற தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், அது குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் மண்டலம் - 7ன் மண்டல அலுவலருக்கு உத்தரவிடுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர், 2011-ல் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றிற்கு உரிமையான நிலங்களைக் குறிப்பிடும் நில

வரைபடங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்து பெற்று, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களை கண்டறியவும், அவ்விடங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து அகற்றவும் உத்தரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2011-ல் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றிற்கு உரிமையான நிலங்களைக் குறிப்பிடும் நில வரைபடங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்து விரைவில் பெற்று எவ்வித கால தாமதமும் செய்யாமல், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களில் உள்ள கட்டடங்கள் அனைத்தையும் அகற்றி, மாநகராட்சிக்குச் சொந்தமாக்க வேண்டும் என்று அனைத்து மண்டல அலுவலர்களுக்கும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் நடைமுறையிலுள்ள உரிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அனைத்து உதவி ஆணையாளர்களுக்கும், மண்டல அலுவலர்களுக்கும் எச்சரிக்கை விடுத்து சுற்றறிக்கை அனுப்ப வேண்டும் எனவும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளரை இம்முறைமன்றம் கேட்டுக்கொள்கிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உடைமையான ஆக்கிரமிப்புக்குள்ளான பெருவாரியான பகுதிகள், மாநகராட்சியின் அலுவலர்கள் ஒத்துழைப்பு இல்லாமல் நடக்க எந்தவொரு வாய்ப்பும் இல்லை. கள அலுவலர்கள், உயர் அலுவலர்களுக்கு தெரிவிக்காததும், உயர் அலுவலர்கள் அடிக்கடி கள ஆய்வு மேற்கொண்டு, ஆக்கிரமிப்புகள் குறித்து ஆய்வின்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்காத போக்கையும் காட்டுகிறது. பெரும்பாலான நிகழ்வுகளில், மாநகராட்சி அலுவலர்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு உடந்தையாக செயல்படுவதையே காட்டுகிறது. <u>இவ்வாறான ஆக்கிரமிப்புகள் தொடருமானால், புற்று நோய் பரவுதல் போல் மாநகராட்சிக்கு சொந்தமான பெரும்பாலான பகுதிகள் நில ஆக்கிரமிப்பாளர்களின் கைகளுக்குச் செல்லும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறது.</u>

மனுதாரர் 28.7.2021 அளித்த புகார் மனுவின் மீது சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், தனக்குள்ள அதிகாரங்களை சென்னை மாநகராட்சிக்கு அளித்ததை சுட்டிக் காட்டி 'Chennai City Corporation Act, 1919'- ன்படி 4.8.2021 அன்று நடவடிக்கை எடுக்கக் கோரி அனுப்பியும் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் சுமார் பத்து மாத காலம் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காதது <u>மிகவும் கண்டனத்திற்குரிய செயலாகும்.</u>

மனுதாரரின் புகார், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அறிக்கை, வட கிழக்குப் பருவ மழைக்காலத்தில் மக்கள் பட்ட துயர், அம்பத்தூர் கிராம நிர்வாக அலுவலரின் ஆக்கிரமிப்பு குறித்த அறிக்கை ஆகியவற்றிற்குப் பின்னரும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காத <u>சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் அனைவரையும் இந்த ஆக்கிரமிப்புகளுக்கு பொறுப்பாக்கி, நடைமுறையிலுள்ள சட்ட விதிகளின்படி கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரைத்து ஆணையிடுகிறது.</u>

இந்த ஆணையானது, அரசு முதன்மைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளரது கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் பெயரிட்ட உறையில் அனுப்பிவைக்கப்படவேண்டும். ஆணையாளர் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியது குறித்தும், ஆணையின்படி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விரிவான அறிக்கையினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்துக்கு அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2022–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M.ஜனார்த்தனம்
எண்.33, 1வது தெரு, சம்தரிய நகர்,
அம்பத்தூர், சென்னை – 600 053.

2) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003. (பெயரிட்ட உறையில்)

3) செயற்பொறியாளர்,
வார்டு – 85, மண்டலம் - 7,
பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

22/6/22

செயலாளர்.

22/6/22 3/8

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

இந்த ஆணையானது, அரசு முதன்மைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளரது கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் பெயரிட்ட உறையில் அனுப்பிவைக்கப்படவேண்டும். ஆணையாளர் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியது குறித்தும், ஆணையின்படி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விரிவான அறிக்கையினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்துக்கு அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2022–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M.ஜனார்த்தனம்
எண்.33, 1வது தெரு, சம்தரிய நகர்,
அம்பத்தூர், சென்னை – 600 053.

2) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003. (பெயரிட்ட உறையில்)

3) செயற்பொறியாளர்,
வார்டு – 85, மண்டலம் - 7,
பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032